1972 ஆகஸ்ட் 18]

தொழிலாளர் நல வாரியம், சென்னை (2 நிலையங்கள்), மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெருந்தொழில் நகரங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் நான்கை நிறுவுவதற்கான செயற்குறிப்புகளுக்கு ஏற்பளித்துள்ளது. அந்த நல நிலையங்களில் படிப்பகம்-நூலகம், அகநிலை—புறநிலை விளையாட்டு வசதிகள், வானொலிப் பெட்டிகள், திரைப்படம் காட்டும் கருவிகள், பெண்களுக்குத் தையல் வகுப்புகள் முதலியன செய்து தரப்படும். சென்னையில் விளையாட்டரங்கம் ஒன்றும் கட்டப்படும். மூன்று நல நிலையங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. ஒன்று சென்னை அம்பத்தூரில் 15-1-72 அன்றும், பிறிதொன்றும் கோயம்புத்தூரில் 19—1—72 அன்றும், மற்றொன்று மதுரையில் 21—1—72 அன்றும் தொடங்கப்பட்டது. 1969—70 இல் வாரியம் நலத் திட்டங்களுக்கு நிதி வழங்கும் கருத்து இங்கு எழவில்லை.

Labour Cell

* 50 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government for the organisation of Labour Cell in the State; and

(*b*) if so, the details thereof?

தொழிலாளர் நலக் குழு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் தொழிலாளர் நலக் குழு ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) மற்ற மாநிலங்களிலும் அயல் நாடுகளிலும் உள்ள தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றிய முக்கிய புள்ளி விவரங்களைத் தொகுப்பதும், மாநிலத்தில் வெளியாகும் நாளிதழ்களில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொழிலாளர்களைப் பற்றிய முக்கியச் செய்திகள் அரசின் கொள்கைகளை விமரிசிக்கும் வகையிலிருந்தால் அவற்றை ஆராய்ந்து தொழிலாளர் நல ஆணையாளர், அரசு ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பேற்படுத்துவதும், உள்நாடு மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர் பிரச்சினைகள், தொழிலாளர் நிலை ஆகியவற்றை ஒப்பு நோக்கி ஆராய்வதும் ஆகிய இவையே தொழிலாளர் நல உட்குழுவின் பொதுவான குறிக்கோளும், செயல் வரம்புமாகும். இக்குழுவின் பணிகளையும் தமிழ் நாட்டில் நிறுவவிருக்கும் தொழிலாளர் நல நிறுவனம் (**Labour Institute**) இணைத்து செயலாக்கும். இதற்கான திட்டத்தை நிறைவேற்ற அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

Relief to Workers

* 51 Q.—Thiru KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state whether there is any proposal to give relief to the workers who are affected by prolonged closure or lock-out of the industries?

தொழிலாளர்களுக்கு நிவாரணம்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிடுவதால் அல்லது நீண்ட கதவடைப்பு செய்யப்பட்டு விடுவதால் பாதிக்கப்படுகிற தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளித்திடுகிற திட்டம் பற்றி செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தொழிற்சாலைகள் மூடப்படுவதால் அல்லது கதவடைப்பு செய்யப்படுவதால் பாதிக்கப்படுகிற தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பது குறித்துச் செயற்குறிப்பு ஏதும் இல்லை.